FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364164

1. District : Dharmapuri PS: VSAC, Year: 2026 FIR No.: 5/AC/2026 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 24.10.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act, 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 23.10.2026 Prior to 12.45 Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 24.10.2026 at 04.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 152 306319 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Suo Moto
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Executive Officer Selection Grade Town Panchayat, Palacode, Dharmapuri District at about 25 Kms North-West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A.T. JAIKUMAR (b) Father's/ Husband's Name : Tr. A. THIYAGARAJAN,
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 53/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Superintendent of Police (g) Address : O/o the Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Dharmapuri.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. S. Padmavathi, age 40/2026, W/o. Selvaraj, Junior Assistant, O/o the Selection Grade Town Panchayat, Palacode, Dharmapuri District.
2) Tr. M. Sachunathan, age 26/2026, S/o Murugan, Record Clerk, O/o the Selection Grade Town Panchayat, Palacode, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
3) Tr. K. Chinnasamy age 40/2026, S/o. Krishnan, Computer Operator, O/o the Selection Grade Town Panchayat, Palacode, Dharmapuri Dist.
4) Tr. C. Raja, age 46/2026, S/o. Chinnu, No. 11/66-07, Mukkugounder Street, Palacode Town, Dharmapuri District.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo Moto CA.T. Jai Kumar

14. Signature / Thumb Impression of the Complainant / Informant DSP
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

24.10.2026

A.T. Jai Kumar
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.

15. Date & Time of despatch to the court: 24.10.2026 at 08.10 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர்
Rank: நிலை ..... No. எண் .....

தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.8/AC/2026, u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988,as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்.12–ன் தொடர்ச்சி.

தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அ.தி.ஜெய் குமார் ஆகிய நான் 23.10.2026–ம் தேதி 12.45 மணிக்கு அலுவலில் இருந்தபோது, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பாலக்கோடு பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, கடை வாடகை வசூலித்தல், புதிய கட்டிடங்களுக்கு வரிவிதித்தல், காலி நிலங்களுக்கு வரிவிதித்தல் மற்றும் வசூல் செய்தல், சுகாதார பொருட்கள், மின்சாதன பொருட்கள், குடிநீர் இணைப்பிற்குரிய பொருட்கள் சப்ளை செய்யும் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் மற்றும் கட்டிட வரைபட உரிமம் பெற்றவர்கள் மற்றும் பேரூராட்சி கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ளவர்களிடமிருந்தும், மேலும் தீபாவளி பண்டிகைக்கு பட்டாசு கடை நடத்த விண்ணப்பித்தவர்களுக்கு தடையின்மை சான்று வழங்கவும், புரோக்கர்கள் மூலமாகவும், நேரடியாகவும், கூகுள்பே போன்பே மூலமாகவும் கையூட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின்பேரில், அரசு சாட்சிகள் திரு.G.சிங்காரவேலன், வட்ட வழங்கல் அலுவலர், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் மற்றும் திரு.P.வினோத்குமார், முதுநிலை ஆய்வாளர், கூட்டுறவு இணை பதிவாளர் அலுவலகம், தருமபுரி ஆகியோர் முன்னிலையில் 23.10.2026–ம் தேதி மாலை 15.00 மணிமுதல் 24.10.2026–ம் தேதி காலை 04.00 மணிவரை பாலக்கோடு பேரூராட்சி அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன். அந்த திடீர் ஆய்விற்காக அலுவலகத்திற்குள் சென்றபோது நேர்எதிரே பிரதான ஹாலில் மேற்கு சுவற்றை ஒட்டினாற்போல் கிழக்குமுகம் பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்த பெண் அலுவலரிடம் இரண்டு நபர்கள் பேசிக் கொண்டிருந்தனர். நான் அந்த பெண் அலுவலரிடம் விசாரிக்க, தனது பெயர் திருமதி.S.பத்மாவதி என்றும், தான் இவ்வலுவலகத்தில் 09.06.2023–ம் தேதி முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் செயல் அலுவலர் குறித்து அவரிடம் விசாரிக்க, தற்போது செயல் அலுவலர் பதவியிடம் காலியாக உள்ளதாகவும், பென்னாகரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர்

திரு.T.செந்தில்குமார் அவர்கள் முழு கூடுதல் பொறுப்பில் பாலக்கோடு தேர்வுநிலை பேரூராட்சியையும் கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் செயல் அலுவலர் தனது பதவி உயர்வு சம்மந்தமாக நேரடி கலந்தாய்வில் கல்ந்து கொள்வதற்காக சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரகத்திற்கு சென்றுள்ளதாகவும், அதனால் தான் அலுவலக பொறுப்பில் இருந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவருடன் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் விசாரிக்க, அதில் ஒருவர் தனது பெயர் C.ராஜா என்றும், மற்றொருவர் திரு.S.கோவிந்தராஜ் என்றும் தெரிவித்தனர். பின்னர் எனது அறிவுரைப்படி அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் அனைவரும் பிரதான ஹாலின் மத்திய பகுதிக்கு அவர்கள்து உடமைகளுடன் வரவழைக்கப்பட்டனர். பின்னர் நான் அலுவலக பணியாளர்களின் வருகைப் பதிவேடு மற்றும் அலுவலக பணியாளர்களின் ரொக்கம் கையிருப்பு பதிவேடு குறித்து திருமதி.S.பத்மாவதி அவர்களிடம் கேட்டதற்கு, அவர் அந்த பதிவேடுகளை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேடுகள் பார்வையிடப்பட்டது. பின்னர் நான் 23.10.2026–ம் தேதி அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்டதற்கு, திருமதி.S.பத்மாவதி அவர்கள் அன்றைய தினம் அரசு கணக்கில் Challan Register- Property tax, Profession tax, Water Charges, Non-tax, Trade licence என்ற தலைப்பில் வசூல் செய்யப்பட்ட Abstrat-ஐ ஆன்லைனில் இருந்து பதிவிறக்கம் செய்து அத்துடன் வசூலான மொத்த தொகை ரூ.30,514/–ஐ கணினி இயக்குபவர் திருமதி.புனிதா மூலம் ஆஜர்படுத்தினார். நான் அந்த தொகையை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்த்தபோது சரியாக இருந்ததால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி கொடுத்து உரிய நேரத்தில் அரசு கணக்கில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. பின்னர் மேற்படி Abstrat-ல் (1–தாள்) திருமதி.பத்மாவதி அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்னர் அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள், மற்றும் அவர்களது உடைமைகளை காவலர்கள் உதவியுடன் சோதனையிடப்பட்டது. சோதனையின்போது அ2 இருக்கை எழுத்தர் திரு.K.பழனி, இளநிலை பொறியாளர் திரு.R.முரளி, பொருத்துநர் திரு.A.ராமலிங்கம், ஆகியோர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சோதனையின்போது பதிவறை எழுத்தர் திரு.M.சக்கநாதன் என்பவர் தனது சட்டையின் இடதுபுற

மேல்பாக்கெட்டிலிருந்து வைத்திருந்த ரூ.400/–க்கு சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஆனால், தனது பேண்டின் வலதுபுற பின்பக்க பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.5,000/– குறித்து கேட்டதற்கு, அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் குறித்து தனிநபர் ரொக்கம் பதிவேட்டில் பதிவு இல்லாததாலும், அந்த பணம் தனக்கோ அல்லது பேரூராட்சி அலுவலக பொறுப்பிலிருந்த திருமதி.S.பத்மாவதி அவர்களுக்கோ பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக வரும் பொதுமக்களிடமிருந்தோ, ஒப்பந்ததாரர்களிடமிருந்தோ கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் செல்வி.P.விஜயா வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சோதனையின்போது கணினி இயக்குபவர் திரு.K.சின்னசாமி என்பவர் தனது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.250/– குறித்து அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஆனால் தனது பேண்டின் இடதுபுற பின்பக்க பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.14,000/– குறித்து அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் குறித்து தனிநபர் ரொக்கம் பதிவேட்டில் பதிவு இல்லாததாலும், அந்த பணம் தனக்கோ அல்லது பேரூராட்சி அலுவலக பொறுப்பிலிருந்த திருமதி.S.பத்மாவதி அவர்களுக்கோ பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக வரும் பொதுமக்களிடமிருந்தோ, ஒப்பந்ததாரர்களிடமிருந்தோ கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அனைத்து அலுவலர்களின் கைப்பேசிகளை பெற்று கூகுள்பே மற்றும் போன்பே செயலிகள் ஆய்வு செய்யப்பட்டது. அதில் கணினி இயக்குபவர் திரு.K.சின்னசாமி என்பவரது கைப்பேசியை அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று கூகுள்பே செயலியை ஆய்வு செய்தபோது, 13.08.2026–ம் தேதி ரூ.97,000/– மற்றும், 14.08.2026–ம் தேதி

ரூ.36,540/–ம் அவருடைய வங்கி கணக்கிற்கு சந்தேகத்திற்கிடமாக வரப்பெற்ற பணம் குறித்த அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளதக்க வகையில் இல்லை. அதனால் அவரது கூகுள்பே செயலியில் மேற்படி இரண்டு சந்தேகத்திற்கிடமான பண பரிவர்த்தனைகளின் விவரங்களை screen shot எடுத்து அலுவலக மடிக்கணினியில் பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து அவரிடமும், இளநிலை உதவியாளர் திருமதி.S.பத்மாவதி அவர்களிடம் கையொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக பணியாளர்களின் வருகைப் பதிவேடு (3–தாள்கள்) மற்றும் அலுவலக பணியாளர்களின் ரொக்கம் கையிருப்பு பதிவேடு (4–தாள்கள்) ஆகியவற்றின் சம்மந்தப்பட்ட பக்கங்களை ஒளிநகல் எடுத்து, திருமதி.S.பத்மாவதி அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் தனிநபர் C.ராஜா என்பவரிடம் விசாரித்தபோது, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பாலக்கோடு வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் சிவலிங்கம் மகன் குமரவேல் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தின் தரைத்தளத்தில் தற்காலிக பட்டாசு கடை வைக்க தடையின்மை சான்று வழங்கக்கோரி 23.10.2026–ம் தேதி விண்ணப்பித்திருப்பதாக தெரிவித்தார். அது குறித்து திருமதி.S.பத்மாவதி அவர்களிடம் கேட்டதற்கு C.ராஜா என்பவருடைய 23.10.2026–தேதியிட்ட விண்ணப்பத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில், விண்ணப்பத்துடன் S.குமரவேல், த/பெ.சிவலிங்கம் என்பவருடன் திரு.ராஜா அவர்கள் செய்துக் கொண்ட தற்காலிக பட்டாசு கடை வாடகை ஒப்பந்த பத்திரம், திரு.C.ராஜா அவர்கள் தற்காலிக பட்டாசு கடை உரிமம் கோரி இ.சேவை மையம் மூலம் விண்ணப்பித்ததற்கான ரசீது, விண்ணப்பதாரரின் சுய உறுதிமொழி, தற்காலிக பட்டாசு கடை உரிமம் பெறுவதற்கான இணைய வழி கட்டணம் ரூ.600/– செலுத்தியதற்கான e-challan, Vijay Fire and Safety, Dharmapuri என்ற கடையில் 12.10.2026–ம் தேதியில் Fire Extinguisher refill செய்ததற்கான ரசீது, விண்ணப்பத்துடன் வழங்க வேண்டிய விவரங்கள், சர்வே எண்.917/1B1B1–க்கான சிட்டா நகல், சொத்துவரி ரசீதின் நகல், திரு.C.ராஜா ஆதார் நகல் மற்றும் திரு.C.ராஜா பெயரில் 18.10.2025–ம் தேதியிட்ட தற்காலிக பட்டாசு உரிமம் நகல் இணைக்கப்பட்டிருந்தது. பின்னர் சந்தேகத்தின்பேரில் அவரிடம் சோதனை

செய்தபோது C.ராஜா தனது underwear-ன் வலதுபுற பாக்கெட்டில் இருந்து ரூ.40,000/– எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளதக்க வகையில் இல்லாததாலும், பட்டாசு உரிமம் பெற, தடையின்மை சான்று பெறுவதற்காக பேரூராட்சி அலுவலக பொறுப்பில் இருந்த இளநிலை உதவியாளர் திருமதி.S.பத்மாவதி அவர்களுக்கு கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதுவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால் அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் சோதனை செய்தபோது தனது சட்டையின் இடதுபுற வெளி மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.7,820/–க்கு அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளதக்க வகையில் இருந்ததால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் விசாரணைக்காக திரு.C.ராஜா என்பவரது விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களின் ஒளிநகல் எடுத்து, அதில் திருமதி.S.பத்மாவதி சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 23.10.2026–ம் தேதி மாலை 17.00 மணிமுதல் 24.10.2026–ம் தேதி காலை 04.00 மணிவரை திடீர் ஆய்வு செய்தபோது அங்கு நடந்த நிகழ்வுகள் குறித்து ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. இளநிலை உதவியாளர் திருமதி.S.பத்மாவதி, கணினி இயக்குபவர் திரு.K.சின்னசாமி மற்றும் பதிவறை எழுத்தர் திரு.M.சச்சுநாதன் ஆகியோர்களின் செயல்பாடுகளானது, பொது ஊழியர்களாக இருந்துக் கொண்டு தங்களுடைய கடமையினை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்வதற்கோ அல்லது செய்யாமல் இருக்கவோ கையூட்டாக பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், 1) இளநிலை உதவியாளர் திருமதி.S.பத்மாவதி, 2) கணினி இயக்குபவர் திரு.K.சின்னசாமி, 3) பதிவறை எழுத்தர் திரு.M.சச்சுநாதன், பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம் மற்றும் 4) திரு.C.ராஜா ஆகியோர்கள் மீது இன்று 24.10.2026–ம் தேதி காலை 07.00 மணிக்கு தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/AC/2026, u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018–ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், திடீர் ஆய்வு செய்தபோது தயார் செய்த

செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றபட்ட சொத்துக்களை தருமபுரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

31.10.16

காவல் துணை கண்காணிப்பாளர்

மாவட்ட குற்றம் மற்றும் தணிக்கை பிரிவு,

தருமபுரி.